DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

Spl.SC.No. 95/2024

PROSECUTION WITNESS No - PW- 1

| | | | |
|---|---|---|---|
| Name : | லாவண்யா | Caste: | |
| Father Name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd day of April 2025.

எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்

<u>முதல் விசாரணை :</u>

1) நான் தற்போது திருவள்ளுர் மாவட்டம் திருத்தணி தாலுகா பழையனூர் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2021-ஆம் ஆண்டு சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி வட்டம் புழுதிபட்டி காவல் எல்லைக்குட்பட்ட வலசைப்ட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியிலிருந்த போது கடந்த 21.12.2022-ம் தேதி காலை 5.00 மணியளிவல் நானும் கிராமஉதவியாளர் செல்வம் என்பவரும் அலுவலகத்தில் பணியில் இருந்த போது எங்களுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வலசைப்பட்டி குரூப் அம்மாப்பட்டி கிராம புலஎண்.271/73ல் அரசுக்குச்சொந்தமான இடத்தில் இரணிப்பட்டி கிராமத்தை சேர்ந்த சின்னையா மகன் இராமசாமி என்பவரும் அவருடன் அவரின் மகன் குமார் என்பவரும் TN 10 R 6331 என்ற JCB யில் TN 45 AW 9103 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் மற்றும் TN 45 AW 9102 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரியின் மூலம் கிராவல் மண்ணை திருட்டுத் தனமாக அள்ளிக் கொண்டிருந்த போது வண்டி ஓடிக் கொண்டிருந்த நிலையில் டிராக்டர் கவிழ்ந்து டிராக்டரை ஓட்டி வந்த உரத்துப்பட்டியைச் சேர்ந்த ராமகிருஷ்ணன் மகன் தமிழரசன் என்பவர் வண்டிக்கு அடியில் சிக்கி இறந்துவிட்டதாக தகவல் தெரிந்து மேற்குறிப்பிட்ட சம்பவம் குறித்து புழுதிப்பட்டி காவல்நிலையம் சென்று எழுத்து மூலமான புகாரை கொடுத்தேன். நான் கொடுத்த புகார் வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவதுதான் அது **அ.சா.ஆ.1** ஆகும். மேலும் மேற்குறிப்பிட்ட புகார் குறித்து காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.04.22 17:20:01 +0530

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

இவ் வழக்கு சம்பவம் குறித்து போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவ தினத்தன்று 21.12.2022ம் தேதி மதியம் 12.00 மணிக்கு விசாரித்தார். அதன் பின்பு தான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அதன் பின்பு என்னை எப்போதும் போலீசார் விசாரிக்கவில்லை. வலசைப்பட்டி குரூப்பில் மொத்தம் 8 கிராமம் உள்ளது என்றால் சரிதான். எனது அலுவலகம் வலசைப்பட்டி கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். வலசைப்பட்டி கிராமத்திற்கும் அம்மாப்பட்டி கிராமத்திற்கும் இடையே சுமார் 1கிமீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். நான் திருச்சியில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் திருச்சியில் இருக்கும் போது தான் எனக்கு தகவல் கிடைத்து சம்பவ இடம் வந்தேன் என்றால் சரிதான். புலஎண்.271/73 என்பது தனியாருக்கு சொந்தமான விவசாய நிலம் என்றால் சரிதான். மேற்படி இடத்திற்கு உரிமையாளர் யார் என்றால் அழகன். மேற்படி சம்பவம் குறித்து அழகன் என்பவரை விசாரித்தேனா என்றால் இல்லை.

எனது அலுவலகத்தை விட்டு வேறு துறைசார்ந்த அலுவலகத்திற்கு செல்ல வேண்டும் என்றால் எனது உயர் அதிகாரிக்கு எழுத்து மூலமான தகவல் கொடுக்க வேண்டும் என்றால் முதலில் வாய் மொழியாக தகவல் தெரிவித்து விட்டு பின்னால் எழுத்து மூலமாக தகவல் கொடுக்க வேண்டும். அவ்வாறு நான் எழுத்து மூலமான தகவல் கொடுத்ததற்கான நகலை காவல்நிலையத்தில் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. வருவாய் ஆய்வாளர் என்னுடன் புகார் கொடுப்பதற்கு வந்தார் என்ற விவரத்தை புகாரிலோ, போலீசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடம் அழகன் என்பவருக்கு சொந்தமானது என்பதற்கான ஆவணம் எதுவும் காவல்நிலையத்தில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். முதல்விசாரணையில் சொல்லியுள்ள டிராக்டர் மற்றும் ஜேசிபி வாகனத்தை நான் கைப்பற்றி காவல்நிலையத்தில் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. நான் கொடுத்த புகாரில் கிராவல் மண் அளவு குறித்து குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. டிராக்டர், ஜேசிபி வாகனம் மற்றும் கிராவல் மண் குறித்த புகைப்படம் எதுவும் காவல்நிலையத்தில் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. மண் அள்ளியதாக சொல்லப்படும் இடத்தின் விஸ்தீரணம், எந்த பகுதியில் அள்ளப்பட்டது என்ற விவரம் குறித்து காவல்நிலையத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வாகனங்களின் எண்கள் போலீசார் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் நான் நேரடியாக பார்த்துதான் புகாரில் சொல்லியுள்ளேன். நான் வாகனத்தை நேரடியாக பார்த்திருந்தால் நானே வாகனத்தை எடுத்துச் சென்று காவல்நிலையத்தில்

ஒப்படைத்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு வந்த நேரம் எத்தனை மணி என்றால் காலை சுமார் 5.00 மணியிருக்கும். நான் தகவல் கிடைத்த உடனேயே சம்பவ இடத்திற்கு வந்துவிட்டேன். நான் சம்பவ இடத்திற்கு சென்ற போது இறந்த நபரின் உடலை அப்புறப்படுத்திக் கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். அப்போதே போலீசார் வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். நான் அப்போதே போலீசாரிடம் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. இறந்த நபர் குறித்து தனியாக யாரேனும் புகார் கொடுத்ததாக தெரிந்து கொண்டேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்லுவது போல் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றும், புள்ளி விவர கணக்கிற்காக பின் யோசனையின் பேரில் நான் பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றும், ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.04.22 17:20:08 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை